**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் இணைச் செயல்முறைகள்**

ந.க.எண். 031660/ஜ/இ1/2022, நாள். 27.12.2023

பொருள்: பள்ளிக் கல்வி – 2022–23 மானியக் கோரிக்கை அறிவிப்பு – சிறந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான அண்ணா தலைமைத்துவ விருது – 2023–24ம் கல்வியாண்டிற்கான விருது வழங்குதல் – சார்பு.

பார்வை: அரசாணை (1டி) எண். 45 பள்ளிக் கல்வித் (பொது1) துறை நாள். 17.4.2023.

............

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2022–23ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது 11.4.2022 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சிறந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது வழங்கப்படும் என அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு பார்வையில் கண்டுள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கட்டமைப்பு, கல்விச் செயல்பாடுகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளின் அடிப்படையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி மாவட்ட அளவிலான தேர்வுக் குழு, பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வின் அடிப்படையில் பார்வையில் கண்டுள்ள அரசாணையின் பின்னிணைப்பு–1ல் தெரிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு இரு மடங்கு எண்ணிக்கையிலான தலைமை ஆசிரியர்களைத் தெரிவு செய்து மதிப்பீட்டுப் படிவம் மற்றும் விவர அறிக்கையினை மாநிலத் தேர்வுக் குழுவுக்கு 20.01.2024க்குள் பரிந்துரை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பொருள்சார்ந்து, பார்வையில் கண்டுள்ள அரசாணையின்படி மாவட்ட தேர்வுக் குழு அமைத்திட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் தலைமை ஆசிரியராக பணியாற்றிய / பணியாற்றி வரும் பள்ளியில் தலைமை ஆசிரியரின் செயல்பாடுகள், பள்ளி வளர்ச்சிக்கு தலைமை ஆசிரியரின் பங்களிப்பு ஆகியனவற்றை கருத்திற்கொண்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு நெறிமுறைகளின்படி பள்ளிகளில் நேரடி ஆய்வு மேற்கொண்டு மாநில தேர்வுக் குழுவிற்கு பரிந்துரைகள்

சமர்ப்பித்திட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வழிகாட்டு நெறிமுறைகளில் பல்வேறு இனங்களுக்கு 5 முதல் 30 வரை தனித்தனியே அதிகபட்ச மதிப்பெண்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே 1. மிகச்சிறப்பு – 100%, 2. சிறப்பு –95%, 3. நன்று – 90%, 4. ஓரளவிற்கு நன்று – 80%, 5. திருப்திகரம் –70%, 6. முன்னேற்றம் தேவை –50%, என்ற விழுக்காட்டின் அடிப்படையில் நேரடி பார்வை மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்து மாவட்ட தேர்வுக் குழுவினரால் மதிப்பெண் வழங்கப்பட வேண்டும்.

அனைத்து இனங்களுக்குமான கூடுதல் மதிப்பெண் அடிப்படையில், தங்களது மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விருது எண்ணிக்கைக்கு இரு மடங்கு எண்ணிக்கையில் தலைமையாசிரியர்களை பரிந்துரைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளவர்கள் / ஒழுங்கு நடவடிக்கையில் தண்டனை பெற்றவர்கள் / குற்ற வழக்கில் தொடர்புடையவர்களை விருதிற்கு பரிந்துரைக்கக் கூடாது.

இணைப்பு– பார்வையில் காணும் அரசாணை நகல் மற்றும்
மதிப்பீட்டு நெறிமுறைகள்

தொடக்கக் கல்வி இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்குநர்

27.12.2023

2/5

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
2. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (இடைநிலை)
3. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

2791
JD(P)

019249

சுருக்கம்

பள்ளிக் கல்வி 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு - சிறந்த பள்ளித் தலைமையாசிரியருக்கான அண்ணா தலைமைத்துவ விருது வழங்குவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் ரூ.10,03,00,000/- நிதி ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (பொதுII)த்துறை

அரசாணை(1டி)எண்.45

நாள்: 17.04.2023,
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம் சித்திரை 4

24 APR 2023
சென்னை - 06

1. 2022-2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.
2. பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண். 031660/ ஐ/ இ1/ 2022, நாள் 14.02.2023.

---

ஆணை:-

சட்டமன்றப் பேரவையில் 2022-2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 11.04.2022 அன்று ஏனையவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பும் வெளியிட்டுள்ளார்:

அறிவிப்பு எண்.9. சிறந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது

**"கல்வி விளையாட்டு, மாணவர் மேம்பாடு, பள்ளிக் கட்டமைப்பு, பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடு, இல்லம் தேடிக் கல்வி என அரசின் திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தும் தலைமை ஆசிரியர்களுக்கு அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது வழங்கப்படும். ஆண்டுதோறும் 100 தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழும், கேடயமும், பள்ளிக்கு ரூ.10 இலட்சம் ஊக்க நிதியும் வழங்கப்படும்."**

2. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு பள்ளிக் கல்வி ஆணையர் தனது கடிதத்தில், அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதுக்கு கீழ்க்காணும் தளங்களில், அளவீடுகளை நிர்ணயம் செய்து, சிறப்பாக செயல்படும் தலைமையாசிரியர்களை கண்டறிந்து, விருது வழங்கலாம் எனவும், தகுதியானவர்களை தேர்வு செய்ய பின்வரும் நடைமுறைகளை பின்பற்றலாம் எனவும் தெரிவித்துள்ளார்:-

அ) பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரித்தல், இடைநிற்றலை முற்றிலுமாக தவிர்த்தல், பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து பள்ளிக்கு மீண்டும் கொண்டு வருதல், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துதல், புதுமையான கற்பித்தல் முறைகளை பின்பற்றுதல், பள்ளிக் கட்டமைப்புக்கான அனைத்து அடிப்படை வசதிகளையும் பெறச் செய்தல், பள்ளி மேலாண்மைக்குழுவுடன் ஒருங்கிணைந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடுதல், ஆசிரியர்களை ஒருங்கிணைத்து பள்ளியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல், மாணவர்களின் பிரச்சனைகளுக்கு உளவியல் பூர்வமாக தீர்வுகளைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்துதல் என அனைத்து தளங்களிலும் சிறப்பாக செயல்படும் தலைமை ஆசிரியர்களைக் கண்டறிந்து விருது வழங்கலாம்.

ஆ) மாணவர்களின் கல்விச் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பவராகவும் தனித்திறன்களான இசை, ஓவியம், விளையாட்டு ஆகியவற்றில் மாணவர்களின் பங்கேற்பினை ஊக்குவிப்பவராகவும் இருத்தல் வேண்டும். கல்வி இணை செயல்பாடுகளான தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர் இயக்கம், நாட்டு நலப்பணித்திட்டம், இளஞ்சிறார் செஞ்சிலுவை, பள்ளி அளவிலான மன்றங்கள் என மாணவர்களின் பன்முகத்திறனையும் வெளிக் கொணர்பவராகவும் இருக்க வேண்டும். பள்ளியில் நூலகத்தினைத் திறம்பட செயல்படுத்தி பாடநூல்களைக் கடந்து மாணவர்களிடையே பொதுவான வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

இ) இதன்படி தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் உள்ள அரசு தொடக்க/ நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து தலா ஒரு பள்ளித் தலைமை ஆசிரியரும் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள மாவட்டத்திற்கு தலா இரண்டு பள்ளித் தலைமை ஆசிரியர்களும் என 100 பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு **சிறந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது** வழங்கி கௌரவிக்கலாம்.

**ஈ) விருது வழங்கிட குழு அமைத்தல்:**

விருது வழங்கிட ஏதுவாக கீழ்க்கண்டுள்ளவாறு பள்ளிகள் தேர்வு செய்திட மாநில தேர்வுக் குழுவும் மற்றும் மாநில தேர்வுக் குழுவிற்கு பரிந்துரை செய்திட மாவட்ட அளவில் ஒரு தேர்வுக் குழுவும் அமைக்கலாம்.

**(i) மாநில தேர்வுக் குழு**

| வ. எண் | பதவி | குழுவில் பதவி |
|---|---|---|
| 1 | பள்ளிக் கல்வி ஆணையர் | தலைவர் |
| 2 | தொடக்கக் கல்வி இயக்குநர் | உறுப்பினர் |
| 3 | இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 4 | இணை இயக்குநர், தொடக்கக் கல்வி | உறுப்பினர் |
| 5 | பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) | உறுப்பினர் செயலர் |

**(ii) மாவட்டத் தேர்வுக் குழு**

| வ. எண். | பதவி | குழுவில் பதவி |
|---|---|---|
| 1 | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2 | முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 3 | தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) | உறுப்பினர் - செயலர் |
| 4 | தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) | உறுப்பினர் |
| 5 | மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |

உ) விருது தேர்வுக் குழுவுக்கான வழிகாட்டி நெறிமுறைகள்:

i) பள்ளி கட்டமைப்பு

வகுப்பறைகள் மாணவர்களின் கற்றலுக்கு உகந்த வகையில் இருக்கை வசதி மற்றும் மின்வசதியுடன் பராமரித்தல், பள்ளியின் சுற்றுச்சுவர் முழுவதுமாக அமைந்திருக்க வேண்டும், விளையாட்டு மைதானம் வசதிகளுடன் இருத்தல் வேண்டும், கழிப்பறைகள் சுத்தமாக பராமரித்தல் வேண்டும், மாணவர்கள் உணவருந்தும் கூடம் வசதி, சுத்தமான குடிநீர் வசதி செய்தல், மரங்கள் நடப்பட்டு பசுமைச்சூழல், பள்ளி வளாகம் சுத்தமாக பராமரித்தல், ஆசிரியர்கள் ஓய்வறை ஆகியவை அமையப் பெற்றிருக்க வேண்டும்.

ii) கல்விச் செயல்பாடுகள்

காலை வழிபாட்டு கூட்டம்' நடத்துதல், ஆசிரியர்களுடன் இணக்கமான சூழல், மாணவர்களின் பெற்றோர்களிடத்திலும், பள்ளி மேலாண்மைக் குழுவினருடன் நல்லுறவு, மாணவர்களை அரசுப் பள்ளிகளுக்கு ஈர்த்தல், பொது மக்கள் பங்களிப்பு, எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக் கல்வி என அரசுத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுதல், பள்ளி நூலகம்/ உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களை சிறப்பாக நிருவாகித்தல், ஆசிரியர்கள் பயிற்சி, வகுப்பறைகளை பார்வையிடுதல் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை ஆய்வு செய்தல், அரசுப் பொதுத் தேர்வுகளில் சிறப்பிடம் பெறச் செய்தல், இணையவழி சேவைகளை செயல்படுத்துதல் பணிகளில் செயலாக்கம் போன்றவையும் அளவீடாக கொள்ளப்படும்.

iii) கல்வி இணைச் செயல்பாடுகள்

உடற்கல்வியில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்துதல், சாரண சாரணியர் இயக்ககம், நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, இளஞ்சிறார் செஞ்சிலுவை அமைப்புகளை பள்ளியில் ஏற்படுத்தி திறம்பட நிர்வகித்தல், மாநில மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கு கொள்ளுதல் மற்றும் பரிசுகளை வெல்லுதல், கலை இலக்கிய போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல், கலைத் திருவிழா, பள்ளி ஆண்டு விழா நடத்துதல், சிறார் திரைப்படங்கள் பள்ளி நூலகத்தினை திறம்பட செயல்படுத்தி மாணவர்களின் வாசித்தல் திறனை மேம்படுத்துதல் போன்றவை அமையப் பெற்றிருக்க வேண்டும்.

மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவானது மேற்காணும் வழிகாட்டி நடைமுறைகளை கவனத்தில் கொண்டு, அதனை பின்பற்றி அப்பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வின் அடிப்படையில் மதிப்பெண்கள் அளித்து அதிலிருந்து இணைப்பு-1ல் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு இரு மடங்கு தலைமை ஆசிரியர்களைத் தேர்வு செய்து அதன் விவர அறிக்கையை மாநில தேர்வுக் குழுவுக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

மாவட்டத் தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்படும் பள்ளிகள் வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவித்துள்ளபடி இருப்பதையும், செயல்படுத்துவதையும் மாநில தேர்வுக்குழு உறுதி செய்யவேண்டும்.

மாவட்டத் தேர்வுக் குழு ஆகஸ்டு மாதம் இரண்டாவது வாரத்தில் இறுதி செய்து பரிந்துரைகளை அனுப்பி வைக்க வேண்டும். மாநிலத் தேர்வுக் குழு ஆகஸ்டு மாதம் இறுதி செய்து அறிஞர் அண்ணா பிறந்த நாளில் (செப்டம்பர் 15ம் நாள்) இவ்விருதினை வழங்கலாம்.

ஊ) விருதிற்கான செலவினம்

100 பள்ளிகளுக்கு தலா 10 இலட்சம் வீதம் ஊக்கத் தொகை = 10 கோடி

பாராட்டுச் சான்றிதழ், கேடயம் தலா ரூ.3000/- வீதம் 100 பள்ளிகள்= 3 இலட்சம்

3. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில், 11.04.2022 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கான மேற்காண்

முன் மொழிவினை ஏற்று அரசளவில் ஆணைகள் வழங்கிடுமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது 11.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சிறந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது என்ற அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக பின்வருவனவற்றிற்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

i) **கல்வி விளையாட்டு, மாணவர் மேம்பாடு, பள்ளிக் கட்டமைப்பு, பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடு, இல்லம் தேடிக் கல்வி என அரசின் திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தும் 100 பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது வழங்கி பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்கி அனுமதி.**

ii) **ஒரு பள்ளிக்கு ரூ.10 இலட்சம் ஊக்க நிதியும், ஒரு தலைமை ஆசிரியருக்கு பாராட்டுச் சான்றிதழ், கேடயம் வழங்க ரூ.3000/- என மொத்தம் ரூ 10,03,000/- வீதம் 100 பள்ளிகளுக்கு ரூ.10,03,00,000/- (ரூபாய் பத்து கோடியே மூன்று இலட்சம்) மட்டும் 2023-2024ஆம் நிதியாண்டு முதல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.**

iii) விருது வழங்கிட ஏதுவாக பள்ளிகளை தேர்வு செய்திட மாநில தேர்வுக் குழுவும் மற்றும் மாநில தேர்வுக் குழுவிற்கு பரிந்துரை செய்திட மாவட்ட அளவில் ஒரு தேர்வுக் குழுவும் பின்வருமாறு அமைத்துக் கொள்ள அனுமதி

**(i) மாநில தேர்வுக் குழு**

| வ. எண் | பதவி | குழுவில் பதவி |
|---|---|---|
| 1 | பள்ளிக் கல்வி ஆணையர் | தலைவர் |
| 2 | தொடக்கக் கல்வி இயக்குநர் | உறுப்பினர் |
| 3 | இயக்குநர்,<br>மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 4 | இணை இயக்குநர், தொடக்கக் கல்வி | உறுப்பினர் |
| 5 | பள்ளிக் கல்வி இணை இயக்குநர்<br>(பணியாளர் தொகுதி) | உறுப்பினர் -<br>செயலர் |

**(ii) மாவட்டத் தேர்வுக் குழு**

| வ. எண். | பதவி | குழுவில் பதவி |
|---|---|---|
| 1 | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2 | முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 3 | தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) | உறுப்பினர் - செயலர் |
| 4 | தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) | உறுப்பினர் |
| 5 | மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |

5. மேலே பத்தி 4, பிரிவு IIல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி ரூ.10,03,00,000/- 2023-2024ஆம் நிதியாண்டு முதல் ஒருங்கிணைந்த கல்வி இயக்ககத்தின் கீழ் பெறப்படும் நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.10351/கல்விII/2023, நாள் 13.04.2023ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு),சென்னை-35.
நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அவர்களின் அலுவலகம்,சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
நிதி(கல்வி-II/வரவு செலவு பொது-I/II/வ.வ- I)த் துறை,சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக் கல்வி (வரவு செலவு)துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

அரசாணை(1டி) எண்.45, பள்ளிக் கல்வி(பொது II)த் துறை நாள் 17.04.2023

ANNEXURE - I

| SI. NO | DISTRICTS | No. of Schools in each district | | No. of Schools eligible for award | |
|---|---|---|---|---|---|
| | | High/Higher Secondary Schools | Primary / Middle Schools | High/Higher Secondary Schools | Primary / Middle Schools |
| 1 | ARIYALUR | 119 | 489 | 1 | 1 |
| 2 | CHENGALPATTU | 143 | 669 | 1 | 1 |
| 3 | CHENNAI | 162 | 356 | 1 | 1 |
| 4 | COIMBATORE | 197 | 1013 | 2 | 1 |
| 5 | CUDDALORE | 246 | 1188 | 2 | 2 |
| 6 | DHARMAPURI | 226 | 1154 | 2 | 2 |
| 7 | DINDIGUL | 170 | 1154 | 1 | 2 |
| 8 | ERODE | 189 | 1099 | 1 | 2 |
| 9 | KALLAKURICHI | 146 | 725 | 1 | 1 |
| 10 | KANCHEEPURAM | 100 | 481 | 1 | 1 |
| 11 | KANNIYAKUMARI | 135 | 381 | 1 | 1 |
| 12 | KARUR | 114 | 706 | 1 | 2 |
| 13 | KRISHNAGIRI | 273 | 1440 | 2 | 1 |
| 14 | MADURAI | 214 | 1033 | 2 | 1 |
| 15 | MAYILADUTHURAI | 76 | 412 | 1 | 1 |
| 16 | NAGAPATTINAM | 96 | 350 | 1 | 1 |
| 17 | NAMAKKAL | 161 | 851 | 1 | 1 |
| 18 | PERAMBALUR | 92 | 268 | 1 | 2 |
| 19 | PUDUKKOTTAI | 219 | 1351 | 2 | 1 |
| 20 | RAMANATHAPURAM | 138 | 928 | 1 | 1 |
| 21 | RANIPET | 121 | 620 | 1 | 2 |
| 22 | SALEM | 296 | 1476 | 2 | 1 |
| 23 | SIVAGANGAI | 138 | 979 | 1 | 1 |
| 24 | TENKASI | 80 | 374 | 1 | 2 |
| 25 | THANJAVUR | 229 | 1149 | 2 | 1 |
| 26 | THE NILGIRIS | 94 | 320 | 1 | 1 |
| 27 | THENI | 106 | 424 | 1 | 1 |
| 28 | THOOTHUKKUDI | 88 | 624 | 1 | 2 |
| 29 | TIRUCHIRAPPALLI | 224 | 1073 | 2 | 1 |
| 30 | TIRUNELVELI | 94 | 390 | 1 | 1 |
| 31 | TIRUPATHUR | 115 | 602 | 1 | 2 |
| 32 | TIRUPPUR | 162 | 1168 | 1 | 2 |
| 33 | TIRUVALLUR | 225 | 1111 | 2 | 2 |
| 34 | TIRUVANNAMALAI | 348 | 1656 | 2 | 1 |
| 35 | TIRUVARUR | 144 | 802 | 1 | 1 |
| 36 | VELLORE | 135 | 663 | 1 | 1 |
| 37 | VILLUPURAM | 241 | 1053 | 2 | 1 |
| 38 | VIRUDHUNAGAR | 190 | 806 | 1 | 1 |
| | Total | 6246 | 31338 | 50 | 50 |

Remarks: Wherever no. of schools identified for award is more than one in a particular category, it should be shared equally. (i.e) between two schools under elementary, one each for Primary and Middle school should be awarded. The same analogy applies for High and Higher Sec. Schools too.

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

# அண்ணா தலைமைத்துவ விருது - 2022-2023

## (துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் )

பள்ளியின் பெயர்

ஒன்றியத்தின் பெயர்

மாவட்டத்தின் பெயர்

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு - பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 1 | பள்ளி வளாகம் / பாதுகாப்பு நடவடிக்கைகள் | | | | |
| | 1 | பள்ளி வளாகம் தூய்மையாக பராமரித்தல் ( 10 மதிப்பெண்கள்) | 25 | | |
| | 2 | பாதுகாப்பான சுற்றுச் சுவர் மற்றும் நுழைவு வாயில்கள் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | தீத்தடுப்பு உபகரணம் - போதுமான எண்ணிக்கையில் நடைமுறையில் இருத்தல் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | முதலுதவிப் பெட்டி மற்றும் அதன்பாடு பயன்பாடு ( 5 மதிப்பெண்கள்) | | | |
| 2 | பள்ளி சுகாதார வசதிகள் | | | | |
| | 1 | மாணவ / மாணவியர்களுக்கு போதுமான TOILET AND URINAL ( 5 மதிப்பெண்கள் | 10 | | |
| | 2 | கழிப்பறைகளில் போதுமான தண்ணீர் வசதி, தூய்மைப் பணிகள் மற்றும் சுகாதாரப் பணிக்கு தேவையான பொருட்களின் இருப்பு மற்றும் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| 3 | சுகாதாரமான குடிநீர் வழங்குதலை உறுதி செய்தல் | | | | |
| | 1 | போதுமான நீர் ஆதாரம், சேமிப்பு முறைகள், குடிநீர் குழாய்கள், கை கழுவும் வசதி உள்ளிட்டவை. ( 10 மதிப்பெண்கள்) | 20 | | |
| | 2 | சுத்திகரிக்கப்பட்ட (RO) குடிநீர் வழங்குதல் மற்றும் நீர்த்தேக்க தொட்டிகளின் பராமரிப்பு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | மழைநீர் சேகரிப்பு மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரை பள்ளித் தோட்டம், காய்கறித் தோட்டம் உள்ளிட்டவற்றிற்குப் பயன்படுத்தல் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| 4 | பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள் | | | | |
| | 1 | வகுப்பறைகள் வண்ணம் தீட்டப்பட்டு தூய்மையாக பராமரித்தல், கரும்பலகைகளை பராமரித்தல். (10 மதிப்பெண்கள்) | 30 | | |
| | 2 | அனைத்து வகுப்பறைகளிலும் போதுமான இருக்கைகள், மின் வசதி, மின் விளக்குகள், மின் விசிறிகளின் பயன்பாடு (10 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | சத்துணவுக் கூடம் சுகாதாரமாக பராமரித்தல், இருப்பு மற்றும் பயன்பாடு, மாணவர்கள் உணவருந்த உரிய ஏற்பாடுகள் (10 மதிப்பெண்கள்) | | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 5 | **அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்துதல்** | | | | |
| | 1 | விலையில்லா புத்தகம் / சீருடை உள்ளிட்ட அனைத்து நலத்திட்ட உதவிகள் உரிய காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கபட்டுள்ளமை, தொடர்புடைய பதிவேடுகள், இருப்பு பராமரிப்பு (20 மதிப்பெண்கள்) | 30 | | |
| | 2 | மாற்றுத் திறன் குழந்தைகளுக்கான அரசு நலத்திட்டங்களைப் பெற்றுத் தருதல், உள்ளடக்கிய கல்வித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துதல் (10 மதிப்பெண்கள்) | | | |
| 6 | **மாணவ / மாணவியர்கள் சேர்க்கை (2022-23)** | | | | |
| | 1 | சேர்க்கை அதிகரிப்பு ஐந்து மாணவர்களுக்கு ஒரு மதிப்பெண் வீதம் அதிகபட்சம் 40 மதிப்பெண்கள் | 40 | | |
| 7 | **மாணவர்களின் அடிப்படை திறன்கள்** | | | | |
| | 1) | தமிழ் (வாசித்தல் & எழுதுதல்) (30 மதிப்பெண்கள்) | 120 | | |
| | 2) | ஆங்கிலம் (வாசித்தல் & எழுதுதல்) (30 மதிப்பெண்கள்) | | | |
| | 3) | அடிப்படைக் கணிதத் திறன் (Arithmatic Skill) (30 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | ஓவியம் & கைத்தொழில் திறன்கள் (30 மதிப்பெண்கள்) | | | |
| 8 | **மாணவர்களின் பன்முகத்திறன் வெளிப்படுத்த அளிக்கப்பட்டு வரும் வாய்ப்புகள்** | | | | |
| | 1 | பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு விழா, கல்வி வளர்ச்சி நாள் விழா, இளைஞர் எழுச்சி நாள் விழா, குழந்தைகள் தின விழா உள்ளிட்ட விழாக்களை சிறப்பாக கொண்டாடுதல் (40 மதிப்பெண்கள்) | 40 | | |
| 9 | **மாணவ/மாணவியர்கள் இடைநிற்றலை தவிர்த்தல்** | | | | |
| | 1 | இடைநின்ற மாணவர்களை கண்டறிதல், கலந்தாலோசனை வழங்குதல், கற்றலை ஊக்கப்படுத்துதல் மற்றும் தொடர் கண்காணித்தல். (20 மதிப்பெண்கள்) | 35 | | |
| | 2 | கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல், பயிற்சி முன்னேற்றம் மற்றும் அடைவு (15 மதிப்பெண்கள்) | | | |
| 10 | | **எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்பாடுகள்** | 40 | | |
| 11 | | **காலை உணவுத் திட்டம் செயல்படுத்துதல் (15 மதிப்பெண்கள்)** | 15 | | |
| 12 | | **தொடக்கப் பள்ளிகளில் 5ம் வகுப்பு நிறைவு செய்யும் அனைத்து மாணவர்களும் 6ம் வகுப்பில் சேர்வதையும் நடுநிலைப் பள்ளிகளில் 8ம் வகுப்பு நிறைவு செய்யும் மாணவர்கள் அனைவரும் உயர் வகுப்பில் சேர்வதை உறுதிபடுத்துதல். (20 மதிப்பெண்கள்)** | 20 | | |
| 13 | பள்ளி அலுவலக மேலாண்மை | | | | |
| | 1 | மின்னணு பதிவேடுகள் மற்றும் இதர பதிவேடுகளைப் பாராமரித்தல். (10 மதிப்பெண்கள்) | 10 | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள்<br>(குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 14 | **பள்ளி மேலாண்மை குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக செயல்பாடுகள்** | | | | |
| | 1 | பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள். இதன் மூலம் பள்ளி வளர்ச்சியில் தலைமையாசிரியரின் பங்களிப்பு (5 மதிப்பெண்கள்) | 10 | | |
| | 2 | பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள். இதன் மூலம் பள்ளி வளர்ச்சியில் தலைமையாசிரியரின் பங்களிப்பு (5 மதிப்பெண்கள்) | | | |
| 15 | | **தலைமையாசிரியரின் வகுப்பறை மேலாண்மை (20 மதிப்பெண்கள்)** | 20 | | |
| 16 | | **சமூக பொறுப்புணர்வு நிதி, நம்ம ஊரு, நம்ம பள்ளி, பெற்றோர் / பொதுமக்கள் பங்களிப்புடன் தலைமையாசிரியரால் மேற்கொள்ளப்பட்ட பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு சார்ந்த நடவடிக்கைகள் (25 மதிப்பெண்கள்)** | 25 | | |
| 17 | | **பள்ளியில் தனித்துவமிக்க மற்றும் சிறப்பான செயல்பாடுகள் (10 மதிப்பெண்கள்)** | 10 | | |
| | | **மொத்த மதிப்பெண்கள்** | 500 | | |

**<u>மாவட்டத் தேர்வுக் குழு உறுப்பினர்களின் கையொப்பம்</u>**

முதன்மைக் கல்வி அலுவலர் – தலைவர்

முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் – உறுப்பினர்

தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) – உறுப்பினர் செயலர்

தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) – உறுப்பினர்

மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் – உறுப்பினர்

# அண்ணா தலைமைத்துவ விருது - 2022-2023

(அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்)

பள்ளியின் பெயர்

ஒன்றியத்தின் பெயர்

மாவட்டத்தின் பெயர்

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 1 | **பள்ளி வளாகம் / பாதுகாப்பு நடவடிக்கைகள்** | | | | |
| | 1 | பள்ளி வளாகம் தூய்மையாக பராமரித்தல் ( 5 மதிப்பெண்கள்) | 25 | | |
| | 2 | விளையாட்டு மைதானம் / ஆடுகளங்கள் மற்றும் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | பாதுகாப்பான சுற்றுச் சுவர் மற்றும் நுழைவு வாயில்கள் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | தீத்தடுப்பு உபகரணம் – போதுமான எண்ணிக்கையில் நடைமுறையில் இருத்தல் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 5 | முதலுதவிப் பெட்டி மற்றும் அதன் பயன்பாடு ( 5 மதிப்பெண்கள்) | | | |
| 2 | **பள்ளி சுகாதார வசதிகள்** | | | | |
| | 1 | மாணவ / மாணவியர்களுக்கு போதுமான TOILETS AND URINALS ( 5 மதிப்பெண்கள் | 15 | | |
| | 2 | கழிப்பறைகளில் போதுமான தண்ணீர் வசதி, தூய்மைப் பணிகள் மற்றும் சுகாதாரப் பணிக்கு தேவையான பொருட்களின் இருப்பு மற்றும் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | நாப்கின் வழங்கும் மற்றும் எரியூட்டும் இயந்திரத்தின் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| 3 | **சுத்தமான குடிநீர் வழங்குதல்** | | | | |
| | 1 | போதுமான நீர் ஆதாரம், சேமிப்பு முறைகள், குடிநீர் குழாய்கள், கைக்கழுவும் வசதி உள்ளிட்டவை. ( 5 மதிப்பெண்கள்) | 15 | | |
| | 2 | சுத்திகரிக்கப்பட்ட (RO) குடிநீர் வழங்குதல் மற்றும் நீர்த்தேக்க தொட்டிகளின் பராமரிப்பு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | மழைநீர் சேகரிப்பு மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரை பள்ளித் தோட்டம், காய்கறித் தோட்டம் உள்ளிட்டவற்றிற்குப் பயன்படுத்தல் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| 4 | **பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள்** | | | | |
| | 1 | வகுப்பறைகள் வண்ணம் தீட்டப்பட்டு தூய்மையாக பராமரித்தல், கரும்பலகைகளை பராமரித்தல். (5 மதிப்பெண்கள்) | | | |
| | 2 | அனைத்து வகுப்பறைகளிலும் போதுமான இருக்கைகள், மின் வசதி, மின் விளக்குகள், மின் விசிறிகளின் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | ஆய்வக வசதி மற்றும் ஆய்வகப் பொருட்களின் பயன்பாடு Issue register/consumable stock register பார்வையிடப்பட வேண்டும். (5 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | CCTV உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் (5 மதிப்பெண்கள்) | | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| | 5 | உயர்தொழில்நுட்ப ஆய்வகம்/SMART CLASS கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல் ( 5 மதிப்பெண்கள்) | 40 | | |
| | 6 | ஆசிரியர் ஓய்வறை பராமரிப்பு மற்றும் நாளிதழ்கள், மேற்கோள் நூல்கள், கனவு ஆசிரியர் இதழ்கள் ஆகியவற்றின் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 7 | சத்துணவுக் கூடம் சுகாதாரமாக பராமரித்தல், இருப்பு மற்றும் பயன்பாடு, மாணவர்கள் உணவருந்த உரிய ஏற்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 8 | தனி நூலக அறை, நூல்கள் வழங்குதல் மற்றும் நூலகப் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| 5 | அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்துதல் | | | | |
| | 1 | விலையில்லா புத்தகம் / சீருடை உள்ளிட்ட அனைத்து நலத்திட்ட உதவிகள் உரிய காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கபட்டுள்ளமை, தொடர்புடைய பதிவேடுகள், இருப்பு பராமரிப்பு (10 மதிப்பெண்கள்) | 20 | | |
| | 2 | அனைத்து வகையான கல்வி உதவித் தொகைகள் வழங்குதல் (உரிய காலத்தில் மாணவர்கள் இணையவழியில் விண்ணப்பிப்பதை உறுதி செய்தல், இணையவழி விண்ணப்பங்களை தலைமையாசிரியர்கள் அங்கீகரித்தல்) மற்றும் நிலுவை விண்ணப்பங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | மாற்றுத் திறன் குழந்தைகளுக்கான அரசு நலத்திட்டங்களைப் பெற்றுத் தருதல், உள்ளடக்கிய கல்வித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துதல் (5 மதிப்பெண்கள்) | | | |
| 6 | மாணவ / மாணவியர்கள் சேர்க்கை (2022–23) | | | | |
| | 1 | சேர்க்கை அதிகரிப்பு ஐந்து மாணவர்களுக்கு ஒரு மதிப்பெண் வீதம் அதிகபட்சம் 30 மதிப்பெண்கள் | 30 | | |
| 7 | புரவலர்கள் சேர்க்கை | | | | |
| | 1 | புரவலர்கள் சேர்க்கை மற்றும் புரவலர் நிதி பயன்பாடு (தலைமையாசிரியர் பள்ளியில் பணியாற்றிபோது மேற்கொள்ளப்பட்ட புரவலர் சேர்க்கை) (5 மதிப்பெண்கள்) | 5 | | |
| 8 | மாணவர்களின் அடிப்படை திறன்கள் | | | | |
| | 1) | தமிழ் (வாசித்தல் & எழுதுதல்) (20 மதிப்பெண்கள்) | 70 | | |
| | 2) | ஆங்கிலம் (வாசித்தல் & எழுதுதல்) (20 மதிப்பெண்கள்) | | | |
| | 3) | அடிப்படைக் கணிதத் திறன் (Arithmatic Skill) (20 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | ஓவியம் & கைத்தொழில் திறன்கள் (10 மதிப்பெண்கள்) | | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 9 | **மாணவர்களின் பன்முகத்திறன் வெளிப்படுத்த அளிக்கப்பட்டு வரும் வாய்ப்புகள்** | | | | |
| | 1 | விளையாட்டுப் போட்டிகள் (குறுவட்டப் பங்கேற்பு, மாவட்டப் போட்டிகளில் பங்கேற்பு, மாநில பங்கேற்பு மற்றும் வெற்றிகள்) 20 மதிப்பெண்கள் | 85 | | |
| | 2 | கட்டுரை, கவிதை, பேச்சு மற்றும் ஓவிய பேட்டிகள் வட்டார மற்றும் மாவட்ட, மாநில அளவிலான பங்கேற்பு, இலக்கிய மன்ற செயல்பாடுகள் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | அறிவியல் கண்காட்சி, அறிவியல் நாடகம், Inspire Award, வானவில் மன்ற செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | சிறார் திரைப்படம் திரையிடுதல் மற்றும் தொடர்புடைய போட்டிகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 5 | சுற்றுச்சூழல் மன்றம், எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி திட்டச் செயல்பாடுகள் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| | 6 | வினாடி வினா மன்ற செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 7 | NCC, JRC செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 8 | சாரண, சாரணியர் இயக்க செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 9 | கலைத் திருவிழாவில் மாணவர் பங்கேற்பு (10 மதிப்பெண்கள்) | | | |
| | 10 | பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு விழா, கல்வி வளர்ச்சி நாள் விழா, இளைஞர் எழுச்சி நாள் விழா, குழந்தைகள் தின விழா உள்ளிட்ட விழாக்களை சிறப்பாக கொண்டாடுதல் (20 மதிப்பெண்கள்) | | | |
| 10 | **மாணவ/மாணவியர்கள் இடைநிற்றலை தவிர்த்தல்** | | | | |
| | 1 | இடைநின்ற மாணவர்களை கண்டறிதல், கலந்தாலோசனை வழங்குதல், கற்றலை ஊக்கப்படுத்துதல் மற்றும் தொடர் கண்காணித்தல். ( 15 மதிப்பெண்கள்) | 30 | | |
| | 2 | கற்றலில் பின் தங்கிய மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல், பயிற்சி முன்னேற்றம் மற்றும் அடைவு (15 மதிப்பெண்கள்) | | | |
| 11 | **SSLC தேர்ச்சி சதவிதம் (95 and above 5 மதிப்பெண்கள், 90 and above 4 மதிப்பெண்கள், 85 and above 3 மதிப்பெண்கள், இதர தேர்ச்சி விழுக்காடு – 2 மதிப்பெண்கள்) Last 5 Years** | | | | |
| | 1) | 2018-2019 | 25 | | |
| | 2) | 2019-2020 | | | |
| | 3) | 2020-2021 | | | |
| | 4) | 2021-2022 | | | |
| | 5) | 2022-2023 | | | |
| 12 | | **மாணவர்கள் உயர்கல்வி பயில்வதை உறுதிபடுத்துதல்** | | | |
| | 1 | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களும் உயர் வகுப்புகளில் 100 சதவிகிதம் சேர்க்கை மேற்கொள்வதை உறுதி செய்தல். (20 மதிப்பெண்கள்) | 30 | | |
| | 2 | NMMS /TRUST உள்ளிட்ட தேர்வுகளில் மாணவர்களின் பங்களிப்பு (10 மதிப்பெண்கள்) | | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள்<br>(குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 13 | பள்ளி அலுவலக மேலாண்மை | | | | |
| | 1 | EMIS பதிவுகளின் துல்லியத்தன்மை (School, Student and Teacher Profile ) (10 மதிப்பெண்கள்) | 30 | | |
| | 2 | இணையவழி சேவைகளை செயல்படுத்துதல் (G2C சேவைகள்– PSTM சான்றிதழ் சேவைகள் வழங்குதல் உள்ளிட்டவைகள்) (10 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | மின்னணு பதிவேடுகள் மற்றும் இதர பதிவேடுகளைப் பாராமரித்தல். ( 10 மதிப்பெண்கள்) | | | |
| 14 | பள்ளி மேலாண்மை குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக செயல்பாடுகள் | | | | |
| | 1 | பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள், இதன் மூலம் பள்ளி வளர்ச்சியில் தலைமையாசிரியரின் பங்களிப்பு (10 மதிப்பெண்கள்) | 10 | | |
| | 2 | பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள், இதன் மூலம் பள்ளி வளர்ச்சியில் தலைமையாசிரியரின் பங்களிப்பு (10 மதிப்பெண்கள்) | | | |
| 15 | | தலைமையாசிரியரின் வகுப்பறை மேலாண்மை (20 மதிப்பெண்கள்) | 20 | | |
| 16 | | தலைமையாசிரியரின் வகுப்பறை உற்றுநோக்கல், கற்றல் கற்பித்தல் மேம்பட தலைமையாசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள், ஆசிரியர் கூட்டங்கள் மற்றும் கல்வி வளர்ச்சி சார்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (20 மதிப்பெண்கள்) | 20 | | |
| 17 | | சமூக பொறுப்புணர்வு நிதி, நம்ம ஊரு, நம்ம பள்ளி / பெற்றோர் / பொதுமக்கள் பங்களிப்புடன் தலைமையாசிரியரால் மேற்கொள்ளப்பட்ட பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு சார்ந்த நடவடிக்கைகள் (25 மதிப்பெண்கள்) | 20 | | |
| 18 | | பள்ளியில் தனித்துவமிக்க மற்றும் சிறப்பான செயல்பாடுகள் குறித்த தலைமையாசிரியரின் மதிப்பீடு (10 மதிப்பெண்கள்) | 10 | | |
| | | மொத்த மதிப்பெண்கள் | 500 | | |

<u>மாவட்டத் தேர்வுக் குழு உறுப்பினர்களின் கையொப்பம்</u>

முதன்மைக் கல்வி அலுவலர் – தலைவர்

முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் – உறுப்பினர்

தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) – உறுப்பினர் செயலர்

தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) – உறுப்பினர்

மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் – உறுப்பினர்

# அண்ணா தலைமைத்துவ விருது - 2022-2023

## (அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்)

பள்ளியின் பெயர்

ஒன்றியத்தின் பெயர்

மாவட்டத்தின் பெயர்

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு - பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 1 | **பள்ளி வளாகம் / பாதுகாப்பு நடவடிக்கைகள்** | | | | |
| | 1 | பள்ளி வளாகம் தூய்மையாக பராமரித்தல் ( 5 மதிப்பெண்கள்) | 25 | | |
| | 2 | விளையாட்டு மைதானம் / ஆடுகளங்கள் மற்றும் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | பாதுகாப்பான சுற்றுச் சுவர் மற்றும் நுழைவு வாயில்கள் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | தீத்தடுப்பு உபகரணம் - போதுமான எண்ணிக்கையில் நடைமுறையில் இருத்தல் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 5 | முதலுதவிப் பெட்டி மற்றும் அதன் பயன்பாடு ( 5 மதிப்பெண்கள்) | | | |
| 2 | **பள்ளி சுகாதார வசதிகள்** | | | | |
| | 1 | மாணவ / மாணவியர்களுக்கு போதுமான TOILETS AND URINALS ( 5 மதிப்பெண்கள் | 15 | | |
| | 2 | கழிப்பறைகளில் போதுமான தண்ணீர் வசதி, தூய்மைப் பணிகள் மற்றும் சுகாதாரப் பணிக்கு தேவையான பொருட்களின் இருப்பு மற்றும் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | நாப்கின் வழங்கும் மற்றும் எரியூட்டும் இயந்திரத்தின் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| 3 | **சுத்தமான குடிநீர் வழங்குதல்** | | | | |
| | 1 | போதுமான நீர் ஆதாரம், சேமிப்பு முறைகள், குடிநீர் குழாய்கள், கைக்கழுவும் வசதி உள்ளிட்டவை. ( 5 மதிப்பெண்கள்) | 15 | | |
| | 2 | சுத்திகரிக்கப்பட்ட (RO) குடிநீர் வழங்குதல் மற்றும் நீர்த்தேக்க தொட்டிகளின் பராமரிப்பு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | மழைநீர் சேகரிப்பு மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரை பள்ளித் தோட்டம், காய்கறித் தோட்டம் உள்ளிட்டவற்றிற்குப் பயன்படுத்தல் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| 4 | **பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள்** | | | | |
| | 1 | வகுப்பறைகள் வண்ணம் தீட்டப்பட்டு தூய்மையாக பராமரித்தல், கரும்பலகைகளை பராமரித்தல். (5 மதிப்பெண்கள்) | | | |
| | 2 | அனைத்து வகுப்பறைகளிலும் போதுமான இருக்கைகள், மின் வசதி, மின் விளக்குகள், மின் விசிறிகளின் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | ஆய்வக வசதி மற்றும் ஆய்வகப் பொருட்களின் பயன்பாடு Issue register/consumable stock register பார்வையிடப்பட வேண்டும். (5 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | CCTV உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் (5 மதிப்பெண்கள்) | | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| | 5 | உயர்தொழில்நுட்ப ஆய்வகம்/SMART CLASS கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல் ( 5 மதிப்பெண்கள்) | 40 | | |
| | 6 | ஆசிரியர் ஓய்வறை பராமரிப்பு மற்றும் நாளிதழ்கள், மேற்கோள் நூல்கள், கனவு ஆசிரியர் இதழ்கள் ஆகியவற்றின் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| | 7 | சத்துணவுக் கூடம் சுகாதாரமாக பராமரித்தல், இருப்பு மற்றும் பயன்பாடு, மாணவர்கள் உணவருந்த உரிய ஏற்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 8 | தனி நூலக அறை, நூல்கள் வழங்குதல் மற்றும் நூலகப் பயன்பாடு (5 மதிப்பெண்கள்) | | | |
| 5 | அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்துதல் | | | | |
| | 1 | விலையில்லா புத்தகம் / சீருடை உள்ளிட்ட அனைத்து நலத்திட்ட உதவிகள் உரிய காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கபட்டுள்ளமை, தொடர்புடைய பதிவேடுகள், இருப்பு பராமரிப்பு (10 மதிப்பெண்கள்) | 20 | | |
| | 2 | அனைத்து வகையான கல்வி உதவித் தொகைகள் வழங்குதல் (உரிய காலத்தில் மாணவர்கள் இணையவழியில் விண்ணப்பிப்பதை உறுதி செய்தல், இணையவழி விண்ணப்பங்களை தலைமையாசிரியர்கள் அங்கீகரித்தல்) மற்றும் நிலுவை விண்ணப்பங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | மாற்றுத் திறன் குழந்தைகளுக்கான அரசு நலத்திட்டங்களைப் பெற்றுத் தருதல், உள்ளடக்கிய கல்வித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துதல் (5 மதிப்பெண்கள்) | | | |
| 6 | மாணவ / மாணவியர்கள் சேர்க்கை (2022-23) | | | | |
| | 1 | சேர்க்கை அதிகரிப்பு ஐந்து மாணவர்களுக்கு ஒரு மதிப்பெண் வீதம் அதிகபட்சம் 30 மதிப்பெண்கள் | 30 | | |
| 7 | புரவலர்கள் சேர்க்கை | | | | |
| | 1 | புரவலர்கள் சேர்க்கை மற்றும் புரவலர் நிதி பயன்பாடு (தலைமையாசிரியர் பள்ளியில் பணியாற்றிபோது மேற்கொள்ளப்பட்ட புரவலர் சேர்க்கை) (5 மதிப்பெண்கள்) | 5 | | |
| 8 | மாணவர்களின் அடிப்படை திறன்கள் | | | | |
| | 1) | தமிழ் (வாசித்தல் & எழுதுதல்) (20 மதிப்பெண்கள்) | 70 | | |
| | 2) | ஆங்கிலம் (வாசித்தல் & எழுதுதல்) (20 மதிப்பெண்கள்) | | | |
| | 3) | அடிப்படைக் கணிதத் திறன் (Arithmatic Skill) (20 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | ஓவியம் & கைத்தொழில் திறன்கள் (10 மதிப்பெண்கள்) | | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள் (குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 9 | **மாணவர்களின் பன்முகத்திறன் வெளிப்படுத்த அளிக்கப்பட்டு வரும் வாய்ப்புகள்** | | | | |
| | 1 | விளையாட்டுப் போட்டிகள் (குறுவட்டப் பங்கேற்பு, மாவட்டப் போட்டிகளில் பங்கேற்பு, மாநில பங்கேற்பு மற்றும் வெற்றிகள்) 20 மதிப்பெண்கள் | 80 | | |
| | 2 | கட்டுரை, கவிதை, பேச்சு மற்றும் ஓவிய பேட்டிகள் வட்டார மற்றும் மாவட்ட, மாநில அளவிலான பங்கேற்பு, இலக்கிய மன்ற செயல்பாடுகள் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | அறிவியல் கண்காட்சி, அறிவியல் நாடகம், Inspire Award, வானவில் மன்ற செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 4 | சிறார் திரைப்படம் திரையிடுதல் மற்றும் தொடர்புடைய போட்டிகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 5 | சுற்றுச்சூழல் மன்றம், எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி திட்டச் செயல்பாடுகள் ( 5 மதிப்பெண்கள்) | | | |
| | 6 | வினாடி வினா மன்ற செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 7 | NSS, NCC, JRC செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 8 | சாரண, சாரணியர் இயக்க செயல்பாடுகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| | 9 | கலைத் திருவிழாவில் மாணவர் பங்கேற்பு (10 மதிப்பெண்கள்) | | | |
| | 10 | பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு விழா, கல்வி வளர்ச்சி நாள் விழா, இளைஞர் எழுச்சி நாள் விழா, குழந்தைகள் தின விழா உள்ளிட்ட விழாக்களை சிறப்பாக கொண்டாடுதல் (15 மதிப்பெண்கள்) | | | |
| 10 | **மாணவ/மாணவியர்கள் இடைநிற்றலை தவிர்த்தல்** | | | | |
| | 1 | இடைநின்ற மாணவர்களை கண்டறிதல், கலந்தாலோசனை வழங்குதல், கற்றலை ஊக்கப்படுத்துதல் மற்றும் தொடர் கண்காணித்தல். ( 10 மதிப்பெண்கள்) | 20 | | |
| | 2 | கற்றலில் பின் தங்கிய மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல், பயிற்சி முன்னேற்றம் மற்றும் அடைவு (10 மதிப்பெண்கள்) | | | |
| 11 | **SSLC தேர்ச்சி சதவிதம் (95 and above 5 மதிப்பெண்கள், 90 and above 4 மதிப்பெண்கள், 85 and above 3 மதிப்பெண்கள், இதர தேர்ச்சி விழுக்காடு – 2 மதிப்பெண்கள்) Last 5 Years** | | | | |
| | 1) | 2018–2019 | 25 | | |
| | 2) | 2019–2020 | | | |
| | 3) | 2020–2021 | | | |
| | 4) | 2021–2022 | | | |
| | 5) | 2022–2023 | | | |
| 12 | **HSC தேர்ச்சி சதவிதம் (95 and above 5 மதிப்பெண்கள், 90 and above 4 மதிப்பெண்கள், 85 and above 3 மதிப்பெண்கள், இதர தேர்ச்சி விழுக்காடு – 2 மதிப்பெண்கள்) Last 5 Years** | | | | |
| | 1) | 2018–2019 | 25 | | |
| | 2) | 2019–2020 | | | |
| | 3) | 2020–2021 | | | |
| | 4) | 2021–2022 | | | |
| | 5) | 2022–2023 | | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள்<br>(குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 13 | | **மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்கான வழிகாட்டுதல் நிகழ்வுகள் ஒருங்கிணைத்தல்.** | | | |
| | 1 | நான் முதல்வன் திட்டம், வேலைவாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சிகள் சிறப்பாக செயல்படுத்துதல். (5 மதிப்பெண்கள்) | 20 | | |
| | 2 | 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயிலும் மாணவர்கள் விகிதம் (100 % 10 மதிப்பெண்கள், Above 95% – 9 மதிப்பெண்கள், Above 90% – 8 மதிப்பெண்கள், Above 85% – 7 மதிப்பெண்கள் , Above 80% – 6 மதிப்பெண்கள், Above 75% – 5 மதிப்பெண்கள், Other Percentage – 4 மதிப்பெண்கள்) (10 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | NEET / JEE / CLAT உள்ளிட்ட தேர்வுகளில் மாணவர் பங்கேற்பு மற்றும் வெற்றிகள் – தலைமையாசிரியரின் முன் முயற்சிகள் (5 மதிப்பெண்கள்) | | | |
| 14 | | **பள்ளி அலுவலக மேலாண்மை** | | | |
| | 1 | EMIS பதிவுகளின் துல்லியத்தன்மை (School, Student and Teacher Profile ) (10 மதிப்பெண்கள்) | 30 | | |
| | 2 | இணையவழி சேவைகளை செயல்படுத்துதல் (G2C சேவைகள்– PSTM சான்றிதழ் சேவைகள் வழங்குதல் உள்ளிட்டவைகள்) (10 மதிப்பெண்கள்) | | | |
| | 3 | மின்னணு பதிவேடுகள் மற்றும் இதர பதிவேடுகளைப் பாராமரித்தல். ( 10 மதிப்பெண்கள்) | | | |
| 15 | | **பள்ளி மேலாண்மை குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக செயல்பாடுகள்** | | | |
| | 1 | பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள், இதன் மூலம் பள்ளி வளர்ச்சியில் தலைமையாசிரியரின் பங்களிப்பு (5 மதிப்பெண்கள்) | 10 | | |
| | 2 | பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள், இதன் மூலம் பள்ளி வளர்ச்சியில் தலைமையாசிரியரின் பங்களிப்பு (5 மதிப்பெண்கள்) | | | |
| 16 | | **தலைமையாசிரியரின் வகுப்பறை மேலாண்மை (20 மதிப்பெண்கள்)** | 20 | | |
| 17 | | **தலைமையாசிரியரின் வகுப்பறை உற்றுநோக்கல், கற்றல் கற்பித்தல் மேம்பட தலைமையாசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள், ஆசிரியர் கூட்டங்கள் மற்றும் கல்வி வளர்ச்சி சார்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (20 மதிப்பெண்கள்)** | 20 | | |

| வ. எண் | | சிறப்பம்சங்கள்<br>(குறிப்பு – பின்வரும் தலைப்புகளில் தலைமையாசிரியரின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.) | மொத்த மதிப்பெண் | வழங்கப்பட்ட மதிப்பெண் | வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 18 | | சமூக பொறுப்புணர்வு நிதி, நம்ம ஊரு, நம்ம பள்ளி / பெற்றோர் / பொதுமக்கள் பங்களிப்புடன் தலைமையாசிரியரால் மேற்கொள்ளப்பட்ட பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு சார்ந்த நடவடிக்கைகள் (25 மதிப்பெண்கள்) | 20 | | |
| 19 | | பள்ளியில் தனித்துவமிக்க மற்றும் சிறப்பான செயல்பாடுகள் குறித்த தலைமையாசிரியரின் மதிப்பீடு (10 மதிப்பெண்கள்) | 10 | | |
| | | **மொத்த மதிப்பெண்கள்** | **500** | | |

<u>மாவட்டத் தேர்வுக் குழு உறுப்பினர்களின் கையொப்பம்</u>

முதன்மைக் கல்வி அலுவலர் – தலைவர்

முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் – உறுப்பினர்

தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) – உறுப்பினர் செயலர்

தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) – உறுப்பினர்

மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் – உறுப்பினர்